**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C .C. No: 99/2022**

**Dated: 19.05.2026**

**Deposition of Witnesses for PW - 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு.பாலமுருகன்** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**1-ம் எதிரி இறந்து விட்டார். 2-ம் எதிரி ஆஜர். 3-ம் எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**(சாட்சி காணொலி காட்சி மூலம் விசாரிக்கப்பட்டார்)**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**
**Aathar card of the Witness verified.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பூர் மாவட்டம் மூலனூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.09.2021-ம் தேதி சிவகங்கை இளையான்குடி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி இளையான்குடி ஐபுரோ ஐவுளி கடை பின்புறமுள்ள GST City என்ற இடத்தில் கஞ்சா விற்பதாக கிடைத்த ரகசிய தகவலின்பேரில் என்னுடன் பணிபுரிந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.மகாலிங்கம் காவலர்கள் சுந்தரர், மலையரசன், முனியசாமி ஆகியோர்களை உடன் அழைத்து கொண்டு வழக்கிற்கு தேவையான உபகரணங்களுடன் சம்பவ இடத்திற்கு காலை

10.00 மணிக்கு சென்று கண்காணித்தபோது அங்கு சந்தேகத்திற்கிடமாக இருந்த மூன்று சக்கர வாகனத்தில் அமர்ந்துள்ள இப்ராகிம், த/பெ.காஜா முகைதீன் 2) மசுத்அலி, த/பெ.பீர் முகமது மற்றும் ராஜா, த/பெ.சின்னால் ஆகியோரை சுற்றி வளைத்து பிடிக்க முற்பட்டபோது அங்கிருந்து ராஜா என்பவர் தப்பி ஓடி சென்று விட்டார். பின்னர் மற்ற எதிரிகளிடம் கஞ்சா என்னும் போதை பொருள் சம்பந்தமாக தாங்கள் விற்பதாக தகவல் வந்துள்ளது உங்களையும் அரசிதழ் பதிவு பெற்ற நீதித்துறை நடுவர் முன்பாக சோதனை செய்ய கேட்க தங்களுக்கு உரிமையுள்ளது என்று கேட்டதற்கு அவர்கள் தாங்களே சோதனை செய்யலாம் என்று கூறியதன் பேரில் தனித்தனியாக சோதனை சம்மத கடிதம் தயார் செய்தோம். அவற்றில் அந்தெந்த எதிரிகள் அவர்களின் சோதனை சம்மத கடிதத்தில் தனித்தனியாக கைரேகை மற்றும் கையொப்பம் செய்தார்கள். அந்த சோதனை சம்மத கடிதங்களில் சாட்சியாக முனியசாமி மற்றும் மலையரசன் ஆகியோர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள். **இரண்டு சோதனை சம்மத கடிதங்கள் முறையே அதசாஆ.1, 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இப்ராகிம் வைத்திருந்த பையை திறந்து பார்த்தபோது அதில் பொட்டலங்களில் பூ, விதை, காம்புகள் உடைய கஞ்சா இருந்தது. நான் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்த்தபோது 1.100கிகி கஞ்சா இருந்தது. மேலும் மர்சுத்அலி என்பரை சோதனை செய்ய கஞ்சா விற்ற பணம் ரூ.2,680/- இருந்தது. பின்பு எதிரிகள் இருவருக்கும் கஞ்சா விற்ற காரணம் கூறி கைது அறிவிப்பு கடிதங்கள் தனித்தனியாக கொடுத்து மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் கைது செய்தேன். அதற்கான **கைது அறிவிப்பு கடிதங்கள் அதசாஆ.3, 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1-வது எதிரி இப்ராகிம் என்பவர் தானாக முன்வந்து கொடுத்த

ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்கண்ட போலீஸ் சாட்சிகள் முன்னிலையில் 11.30 மணிக்கு பதிவு செய்தேன். எதிரி இப்ராகிம் வைத்திருந்த கஞ்சாவின் மாதிரிக்காக தலா 50 கிராம் விதம் எடையுள்ள இரண்டு மாதிரிகள் எடுத்து SHO சீல் வைத்து அதற்கு S1, S2 என குறியீடு செய்து SHo சீல் வைத்தேன். கஞ்சா மற்றும் மாதிரிகள் அத்தாட்சி தயார் செய்து மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் பகல் 12.00 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றினேன். அதற்கான **அத்தாட்சி அதசாஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு மர்சுத் அலி கஞ்சா விற்று வைத்திருந்த பணம் ரூ.2,680/-ஐ மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் பகல் 12.45 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றினேன். அதற்கான **அத்தாட்சி அதசாஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு எதிரிகள் குற்ற செயலுக்கு பயன்படுத்திய ஒரு இரண்டு இருசக்கர வாகனம் மற்றும் ஒரு மூன்று சக்கர வாகனம் ஆகியவற்றை மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அதற்கான **அத்தாட்சி அதசாஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிகள் மற்றும் தடய சொத்துக்களுடன் நிலையம் வந்து 13.30 மணிக்கு தனி அறிக்கை தயார் செய்து மேல் நடவடிக்கைக்காக காவல் ஆய்வாளர் வசம் எதிரிகள் மற்றும் சொத்துக்களை ஒப்படைத்தேன். தனி அறிக்கை அதசாஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு கோப்பை மேல் நடவடிக்கைக்காக காவல் ஆய்வாளர் திரு.அழகர் அவர்களிடம் ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் விசாரிக்க விவரம் சொன்னேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

என்னை ஆய்வாளர் எந்த தேதியில், எங்கே வைத்து விசாரணை செய்தார் என்றால் காவல் நிலையத்தில் வைத்து சம்பவத்தன்று 02.09.2021-ம் தேதி விசாரணை

செய்தார். விசாரணை வாக்குமூலத்தை பார்த்து தான் நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தற்சமயம் முதல் தகவல் அறிக்கையை பார்த்து சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதம் இரண்டிலும் 2 எதிரிகளிடமும் கையொப்பம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதம் பொதுவாக இருவர்களுக்கும் ஒன்றாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதம் எத்தனை மணிக்கு தயாரிக்கப்பட்டது பற்றி நேரம், தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. அது சோதனை சம்மத கடிதத்தின் மூன்றாவது வரியில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதம், தனி அறிக்கை, அத்தாட்சி கையால் எழுதப்பட்டது ஆகும், ஒப்புதல் வாக்குமூலம், கைது அறிக்கை ஆகியவை மடிகணிணியில் தட்டச்சு செய்யப்பட்டவை ஆகும். சோதனை சம்மத கடிதம், தனி அறிக்கை அத்தாட்சி ஆகியவற்றை யார் எழுதினார்கள் என்றால் சோதனை சம்மத கடிதம், தனி அறிக்கை ஆகியவற்றை நான் எழுதினேன். அத்தாட்சியை என்னோடு ரைடுக்கு வந்த ஒரு காவலர் எழுதியுள்ளார். கைது அறிவிப்பு, ஒப்புதல் வாக்குமூலம் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டது காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தபோது நான் மடிகணிணி கொண்டு சென்றதாக வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. அதசாஆ.5 அத்தாட்சியில் பையுடன் கஞ்சா கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படவில்லை என்றால் சொல்லவில்லை. பகுப்பாய்வுக்கு மாதிரி எடுத்த விவரங்களும் அத்தாட்சியில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதசாஆ.7 அத்தாட்சியில் யாரிடமிருந்து வாகனங்கள் கைப்பற்றப்பட்டது என்ற விவரம் மற்றும் எதிரிகளின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை. 3-வது

எதிரி தப்பித்து ஓடிவிட்டர் என்று நான் விசாரித்தபோது சம்பவ இடத்தில் தயார் செய்த ஆவணங்களில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் விசாரணையில் தப்பி ஓடிய நபர் பற்றி விசாரிக்க இளையான்குடி சின்னாளு மகன் ராஜா என சொல்லியுள்ளேன். அவ்வாறு யாரிடம் விசாரணை செய்தேன் அவர் மூன்றாவது எதிரியின் பெயர் பற்றி யார் கூறினார்கள் என்ற விவரத்தினை ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் விசாரணையில் 3-வது எதிரி எந்த திசையில் ஓடினார் என்றும் அவரை பிடிக்க முயற்சி செய்ததாகவும் சொல்லவில்லை என்றால் சரிதான். 3-வது எதிரியின் அங்க அடையாளங்கள் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் ஒப்புதல் வாக்குமூலம், கைது அறிவிப்பு எங்கு வைத்து பிரிண்ட் அவுட் செய்யப்பட்டது எங்கு வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்ற விவரம் ஆய்வாளர் விசாரணையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் நான் சொல்வது போல் சொன்ன தேதியில் நேரத்தில் எனக்கு எந்த தகவலும் வரவில்லை என்றும் அதன் பேரில் எந்தவிதமான சாட்சிகளுடன் ரைடுக்கு செல்லவில்லை என்றும் எதிரிகளை சொன்ன இடத்தில் விதத்தில் நேரத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றும் எதிரிகளிடமிருந்து எந்தவிதமான கஞ்சாவும் மற்று சான்று பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும் 1-வது எதிரி எந்தவொரு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என்னால் சம்பவ இடத்தில் தயாரிக்கப்பட்டதாக சொல்லப்படும் ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு வழக்கின் தோதிற்காக காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் 2-வது எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யப்படவில்லை என்றும் உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ நடந்ததாக

சொல்லப்படும் இடத்திற்கு சென்றதாக சொல்வது பொய் என்றும் சொன்னால் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. 3-வது எதிரி சம்பவ இடத்தில் இல்லை என்றும் அவர் தப்பி ஓடியதாக சொல்வது பொய் என்றும் அவர் மீது பொய் வழக்கு போடப்பட்டு சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. 1-வது எதிரிக்கும் 2, 3 எதிரிகளுக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல. 2-வது எதிரியை விசாரணை என்ற பெயரில் காவல் நிலையம் அழைத்து வந்து அவர் இவ்வழக்கில் எதிரியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்களுக்கும் 2, 3 எதிரிகளுக்கும் எவ்விதசம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. போதை பொருள் சட்ட விதிமுறைகளை முறையாக கடைபிடிக்காமல் 2, 3 எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** இல்லை.

திறந்த நீதிமனறத்தில் சாட்சி மற்றம் அவரது வழக்குநர்
முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு
சாட்சியிடம் படித்துக் கட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு
சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,
புதுக்கோட்டை.